# மூக்கு அடைப்பு: தடிமன் ஏற்பட்டால் மூக்கை சுத்தம் செய்வது

உங்கள் குழந்தைக்கு தடிமனாக இருக்கும் வேளையில் அவருக்கு சுவாசிப்பதில் சிரமம் இருக்கலாம். ஏனெனில் அவரது மூக்கு சுரப்புக்களால் அடைக்கப்பட்டு இருக்கும்.

அவர் பெரும்பாலும் மூக்கின் வழியாக சுவாசிப்பதால், உங்கள் குழந்தை தனது உணவை சாப்பிடுவதில் சிரமம் இருக்கலாம். அக்காரணத்திற்காக உணவுக்கு முன்னரே மூக்கு சுத்தம் செய்யப்படுகிறது.

## வீட்டில் எவ்வாறு செய்வது

- குழந்தையின் மூக்கு உணர்திறன் உடையதும் மென்மையானதும் கூட, எனவே கீழே உள்ள செய்கைகள் மென்மையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
- குறைந்தது 5மில்லி மூக்கு சுத்தம் செய்யும் திரவ ரியுப்பை **(sérum physiologique)** தயார் செய்யுங்கள்.
- உங்கள் குழந்தையை ஒரு பக்கமாக படுத்திக் கொள்ளுங்கள்.
- ரியுப்பின் நுனியை மேல் நாசியின் உள் செலுத்துங்கள்.
- ரியுப்பின் திரவத்தின் பாதியை மெதுவாக நாசியின் உள்ளே விடுங்கள். அத்திரவம் கீழ் நாசி வழியாக சுரப்புக்களுடன் வெளியேறும் அல்லது தொண்டை வழியாக சென்று விடும்.
- பின்னர், உங்கள் குழந்தை மூச்சு விடுவதற்கு இலகுவாக அவரை இருத்தி வைத்திருங்கள்.
- அவரை மறுபுறம் கிடத்தி, மற்ற நாசியில் இதே போன்று செய்யுங்கள்.

## முக்கியமானது

- இந்த செயல் மென்மையான முறையில் செய்யப்பட வேண்டும்.
- குழந்தையை காயப்படுத்தாமல் இருக்க இந்த சிகிச்சையின் போது அவரை நன்றாக பிடித்துக் கொள்வது அவசியம்.
- குழந்தையின் நாசி இழுக்கும் கருவியை **(mouche bébé)** பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படவில்லை, இருப்பினும் நீங்கள் அதை பயன் படுத்த விரும்பினால், உங்கள் குழந்தை மருத்துவரை அணுகவும்.
- உங்கள் குழந்தையின் சுவாசம் மேம்படவில்லை என்றால், குழந்தை பருவ நிபுணரை அணுகவும்.



Programme cantonal de promotion de la santé et de prévention primaire enfants (0-4 ans) - parents

Section VD Ne Ju Fédération Suisse de Sages-femmes